# வடக்கில் இராணுவ நடவடிக்கை நிறுத்தம்!

(கொழும்பு)
வடக்கில் தற்போது இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்க தெரிவித்துள்ளார்.
கடந்த செவ்வாய்க்கிழமையுடன் யாழ். குடாவில் இடம்
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஐப்பசி 9 | இதழ்: 256
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 26-10-1991

## வவுனியா பகுதியில் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வவுனியாப் பகுதியில் நேற்று பொம்மர் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றதினால், பொதுமக்களின் உடை
(2-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் உள்ள இப்பால் நகரில் கண்ணி வெடியில் சிக்கிய ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
நேற்றுமுன்தினம் திருமலை
(2-ம் பக்கம் பார்க்க)

# ★ எதிரணிகள் ஒத்துழைப்பு தரமறுத்தாலும் நாடாளுமன்றத்தின் பணிகள் இடையூறின்றி நடக்க ஏற்பாடு!

(கொழும்பு)
எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தை புறக்கணித்து ஒத்துழைப்புத் தர மறுத்தாலும் அரசப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலங்கள் நிறைவேற்றப்படும் என்றும் சபை முதல்வரும் அமைச்சரவை பேச்சாளருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இத்தகவலைத் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: நாடாளுமன்ற செயற்பாடு அந்த மகாநாட்டில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் அதை விட்டு அரசு கவனத்தில்
(4ம் பக்கம் பார்க்க)

## பிபிஸி ஒளிபரப்பில் புலிகள்

(லண்டன்)
லண்டன் பி.பி.ஸி நிலையத்தின் தொலைக்காட்சிப்பிரிவு அண்மையில் விடுதலைப் புலிகள்பற்றிய ஒளிபரப்பொன்றை பிரிட்டனில் ஒளிபரப்பியது.
வடபகுதி வந்த இந்த ஒளிபரப்புக் குழு பல பகுதிகளிலும் இதுதொடர்பாக படப்பிடிப்புகளை மேற்கொண்டிருந்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிராக 2-வது நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)
சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்க எதிர்க்கட்சிகள் கொண்டுவரவிருக்கும் இரண்டாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.
இம்மாதம் 10ம் திகதிதான் முகம்மது நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து சபாநாயகராக தொடருகின்ற போதும் அவரை தாம் சபாநாயகராக ஏற்கமுடியாதென
(2-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் தனது நிலையை ஸ்திரப்படுத்துகிறதாம்

(கொழும்பு)
வடபகுதியில் தாம் கைப்பற்றிய பகுதிகளை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர்
(2-ம் பக்கம் பார்க்க)

## ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு சபாநாயகர் பணிப்பு!

(கொழும்பு)
சபாநாயகர் எம்.எச். முகம்மதுவுக்கு எதிராக கடந்த புதன்கிழமையும், வியாழக்கிழமையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கோஷங்களை நாடாளுமன்ற ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு சபாநாயகர் பணித்துள்ளார்.
அத்துடன் மேற்படி கோஷங்களைச் செய்திப் பத்திரிகையிலும் பிரசுரிக்க வேண்டாமென்றும் சபாநாயகர் செய்தி நிறுவனங்களுக்கு கட்டளையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## ஆனையிறவு வழியால் லொறிகள்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு வழியாக புனர்வாழ்வு அமைச்சிலிருந்து உணவுகள் ஏற்றிக்கொண்டு லொறிகள் இன்னும் இரண்டு, மூன்று தினங்களில் வரவிருக்கின்றன.
இவ்வாறு புனர்வாழ்வு
(4ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் உடன்பட்டால் அரசு பேச்சு நடத்ததயார்!

### - அமைச்சர் ரணில் தகவல் -

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் உடன்பட்டால் பேச்சுவார்த்தை நடாத்த அரசு தயாராயிருப்பதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
பேச்சுவார்த்தை தொடர்பாக அரசு ஏற்கனவே விதித்த நிபந்தனைகளுக்கமையவே இப்பேச்சுக்களுக்கு அரசு புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
மேலும் புலிகள் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கும்வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் அவர் கூறினார். (சி)

## கருப்பசாமி விவகாரம் நாடாளுமன்றில் கண்டனம்

(கொழும்பு)
இந்திய வானொலியின் கொழும்பு செய்தியாளர் திரு கருப்பசாமியை இலங்கை அரசு வெளியேற்றியது குறித்து நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
இடதுசாரி ஐக்கிய சோஷலிச கூட்டணியைச் சேர்ந்த திரு. அதாவுட செனவிரத்ன நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில்; இலங்கை அரசின் இந்த நடவடிக்கை இந்தியப் பத்திரிகைகள் மீதும் இந்திய செய்தியாளர் மீதும் மேற்கொள்ளப்பட்ட ஓர் பழிவாங்
(4ம் பக்கம் பார்க்க)

## திங்கள் முதல் பாடசாலைகள் இயங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டப் பாடசாலைகள் யாவும் எதிர்வரும் 28-ந் திகதி திங்கள் முதல் வழமையாக நடைபெறுவதற்குச் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களையும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.
கடந்த வாரம் சில பாட
(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்-வவுனியா வீதி விரைவில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ் - வவுனியா பாதை திறக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.
இப்பாதையூடாக பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளது.
ஊரடங்கு நேரத்தில் தாண்டிக்குளத்தில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களை வவுனியா நகருக்கு பாதுகாப்பாக சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (152)

## நரசிம்மராவ் தமிழகம் விஜயம்

(சென்னை)
இந்தியப் பிரதமர் திரு. பி.வி நரசிம்மராவ் நேற்று தமிழ்
(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நிம் தூசம்

மழையுடன் துளம்பும் தொடர்ந்து தொடருகிறது. நிம் தவம் புதைத்து நிம்மதியாக உறங்குங்கள். மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ 1576)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரில் சனி, ஞாயிறு காலை 11-00 - 12-00 மணி. S. ஜெயராசா 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (கி.4962)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை காசிலிங்கம். கிளிநொச்சி, முருகன் ஸ்ரோர்ஸ், சாரதியோக்கு என்பவருடைய அடையாள அட்டை வட்டுக்கோட்டைச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அத்தியடி ரோட்டிலுள்ள சின்னத்துரையிடம் அல்லது ஆ. சுப்பிரமணியம், வட்டுக்கோட்டை என்பவரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (கி5530)

### பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாவது வருட எம். பி. பி. எஸ். பரீட்சை பகுதி (1) யே 1991 செப்ரெம்பரில் நடைபெற்ற பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளது. இப் பரீட்சையில் வி. முரளி சித்தி படைத்துள்ளார்.

இப் பரீட்சையில் மீள் நூன சித்தியடைந்தவர் விபரம் வருமாறு: சி. வாமதேவன், எம். கி. இப்ராஹிம். (153)

### அதிபருக்கு பாராட்டு

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடந்த ஆசிரியர் தின விழாவில் இளைப்பாறிய அதிபர் வே. சுந்தையா கௌரவிக்கப்பட்டார்.

அதிபர் பொ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் துணை அதிபர் வி. பூரணானந்தசர்மா வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. இ. இந்திரன், திருமதி ஐ. சொ. சண்முகரட்ணம், திருமதி ஜ. சிவகுமாரன், திரு. ச. தியாகராசா ஆகியோர் உரையாற்றினர். (109)

### கற்கைநெறி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஆண் தொண்டர்களுக்கு கற்கைநெறி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. இந்நெறிகள் கொழும்புத்துறையில் உள்ள அவர்களது அலுவலகத்தில் இடம்பெற்றுவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கிருஷ்ணர் நாகபூஷணி**

தோற்றம்: 1920-3-18 மறைவு: 1990-11-6

திதி: 1991-10-26 சனிக்கிழமை

திதி வெண்பா

"செல்லாநின் தொண்ணூறு கார்த்திகைத் திங்களின்
வல்ல தினமாகும் செவ்வாயில் – நல்லவள்
அம்மை நாகபூஷணி அம்மையப்பன் பாதங்கள்
நம்பியே சேர்ந்தனள் நாடி."

ஓராண்டு சென்றாலும் எம் இதயத்தை விட்டு அகலாதிருக்கும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

"நாகபூஷணி இல்லம்",
(வீரபத்திரர் கோவிலடி)
வட்டுக்-கிழக்கு,
சித்தன்கேணி.

(ஏ 1677)

## இலவச மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், கண்பார்வை குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்க முன்வந்துள்ளனர்.

## கடமைக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமை புரிந்த வைத்திய அதிகாரிகளும் சுகாதார ஊழியர்களும் சுகிருகாமிகளில் கடமையாற்றும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய ஊழியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (75,152)

## 5000 மரக்கன்றுகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

இளவாலை கலைவாணி சனசமூக நிலையம் எதிர்வரும் மாவீரர் நினைவுவாரத்தை முன்னிட்டு ஐயாயிரம் மரக்கன்றுகளை பொது மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த ஆண்டு மாவீரர் வாரத்தின் போதும் இந்த சனசமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு ஐயாயிரம் மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (72)

## வணிக விழா

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித. திரேசாள் மகளிர் கல்லூரியும், ஆவரங்கால் ஸ்ரீ நடராஜ இராமலிங்க வித்தியாலயமும் இணைந்து வணிக விழாவைக் கொண்டாடியது.

வணிக விழா நிகழ்ச்சிகள் ஆவரங்கால் ஸ்ரீநடராஜ வித்தியாலய மண்டபத்தில் வணிக பாடத்துறை ஆசிரியை திருமதி ந. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது.

கட்டுரை, கவிதை, பேச்சு வினாவிடை மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## மரக்கன்று உற்பத்தி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் மரம் நடுகைத்திட்டத்திற்கென மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் முயற்சிகளில் 'தமிழீழ ஆய்வு நிறுவனம்' ஈடுபட்டுள்ளது.

வாகை, இப்பிலி, எலுமருக்கு, கொக்குமந்தாரை, திருக்கொன்றல், தேக்கு போன்ற மரங்களின் விதைகள் சேகரிக்க வசதியுள்ள பொதுமக்கள் பொது நிறுவனங்கள் விதைகளைத் தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் கொடுத்துதவுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (154)

## வீதிகள் திருத்தம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சந்தியில் இருந்து மணியந்தோட்டம் வரையுள்ள பிரதான வீதிகள், குறுக்குத் தெருக்களையாவும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாலிங்கம் ஒத்துழைப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மேற்பார்வையில், இப்பகுதிச் சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்பட்டு வருகிறது.

இச்சிரமதானப் பணியை, மணியந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். சேவியர் ஏற்பாடு செய்துள்ளார். (154)

## யாழ். ரெயில் கொள்ளையர் இருவர் கைதானார்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா - கொழும்பு ரெயிலில் கொள்ளையிட்டு வந்த இரு நபர்களை பாலத்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து ஏராளமான ரொக்கப்பணமும், நகைகளும் இருந்தன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரும் கைதுசெய்யப்பட்டார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (152)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாவது எம். பி. பி. எஸ். பரீட்சை செப்ரெம்பர் 1991) முடிவுகள் வெளியாகியுள்ளது.

மேற்படி பரீட்சையில் சித்தி படைத்தவர்கள் விபரம் வருமாறு;

செல்வி ஏ. ஜயமித்த மங்களராணி, கே. ஜீவராசன், செல்வி ரி. மேரி ஹிமிடா, ரி. நக்கீரன், கே. தயானன், ஆர். அருட்செல்வம், வி. அருண்குமார், வி. பாலகிருஷ்ணன், ஜி பி. தேவநாயகம், செல்வி எச் தம்பிப்பிள்ளை, எஸ் ஜெயராஜசிங்கம், கே லோகநாதன், பி. மணிவண்ணன் கே. புவனேந்திரநாதன், செல்வி பி. ரஜனி, கே. சசிதரன், செல்வி எஸ். நரேந்திரராஜா, எஸ். சுப்பிரமணியம் எஸ் சுகுமாரன், எம். தனஞ்செயன், வி. எஸ் தேவகுமார், செல்வி ஏ. தமயந்தி, செல்வி கே. தேவநாயகி, பி. திருமாறன், செல்வி எஸ். உஷாமணி, செல்வி வி. நடராஜா.

மேற்பரீட்சையில் நூனசித்தியடைந்தோர் வருமாறு; ஜே. நிர்மலநாதன், செல்வி கே. வதனலீனா, ஆர். எஸ். ஜெயகுமார் இப்பரீட்சையில் மீள் நூனசித்தியடைந்தவர் வருமாறு: எஸ். கிரிபரதன், 2வது எம் பி. பி. எஸ். 1991 பரீட்சையில் சிறப்பாக சித்தி களை பெற்றதையிட்டு சுப்பிரமணியம் மகாதேவா புலமைப் பரிசிலை செல்வி என். நகுலசிங்கரத்தினம் பெற்றுக்கொண்டார்.

உடலியல் பிரிவுக்குரிய சாள்ஸ் கனகசுந்தரம் ஞாபகார்த்த தங்க பதக்கத்தையும் செல்வி என் நகுலசிங்கரத்தினம் மேற்படி பரீட்சையில் சிறப்பாக சித்திபெற்று சுவீகரித்துக்கொண்டார்.

உடற்கூறு பிரிவுக்குரிய பேராசிரியர் ஆர். கனகசுந்தரம் தங்கப்பதக்கத்தையும் செல்வி என். நகுலசிங்கரத்தினம் பெற்றுள்ளார். (153)

## 1000 குடும்பங்களுக்கு உணவுப் பொருள் உதவி

(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக வடமராட்சிப் பிரிவு அண்மையில் வடமராட்சியில் வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருந்த சுமார் 1000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற உணவு பொருட்களை வழங்கியது.

வடமராட்சிப்பகுதியில் வீடுகளைவிட்டு வெளியேறி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தவிர்ந்த ஏனைய எந்த நிறுவனமும் எந்தவிதமான உதவிகளையும் வழங்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (52)

### கண்ணிவெடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்திலுள்ள குப்புறுப்பிட்டியாவிலுள்ள ஜேர்மன் வானொலி நிலையத்திலிருந்து வாகனமொன்றில்சென்ற ஆறுபேரும் மேற்படி கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது. (வி)

### வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைகளுக்கு பெரும்சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாப் பகுதியிலுள்ள பூவரசங்குளம் பகுதியிலும், மற்றும் சில இடங்களிலும் பொம்மர் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. (வி)

### சபாநாயகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

முகம்மது பற்றி குறிப்பிடும் போது, தான் அவரை வஞ்சப் போர்வழி முகம்மது என்று அழைக்கப்போவதாக எதிர்க் கட்சி உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். [153]

## பாதிக்கப்பட்டோருக்கு சவர்க்காரம் விநியோகம்

(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக வடமராட்சிப்பிரிவு வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சுமார் 3037 குடும்பங்களுக்கு குறைந்த விலையில் சவர்க்கார வகைகளை வழங்கியுள்ளது.

வடமராட்சிப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களில் உள்ளவர்களுக்கும் ஆனையிறவுயுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ள குடும்பங்களுக்கும் ஒரு சலவைசவர்க்காரமும், வாசனை சவர்க்காரமும் சேர்த்து இருபது ரூபாவுக்கு வழங்கப்பட்டது. [52]

### இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் கேர்னல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: வடபகுதியை மெல்ல மெல்ல இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டோம்.

மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளைத் தாம் கைப்பற்றியதையடுத்து கடந்த இருநாட்களாக யுத்தம் எதுவும் நடைபெறவில்லையென்றும் யாழ்ப்பாணப்பகுதி பிற பகுதிகளிலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையை அடைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். [ச]

# யாழ்ப்பாண நூல்நிலையத்தை தீயிட்டவர் காமினியே

## - ஜனாதிபதி பதில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கின் இன்றைய நிலைக்கு காமினி திஸநாயக்காவே பிரதான சூத்திரதாரி என்றும் யாழ். நூலை எரிப்புக்கு அவரே காரணமென்றும் ஜனாதிபதி திரு. பிரேமதாசா கூறியுள்ளார்.

யாழ். நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாக திரு. காமினி திஸநாயக்கா எழுதிய கடிதத்திற்கு ஜனாதிபதி பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினர்.

ஜனாதிபதி மேலும் கூறுகையில். வடக்கு-கிழக்கின் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார்? இதற்கு பிரதான காரணம் திரு. காமினியே பத்து வருடங்களுக்கு முன் 1981ல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக்கிடையிலான உறவுகளில் இது ஒரு கறைபடிந்த துயரமான சம்பவமாகும்.

மாராளுமன்றில் மாவட்ட அபிவிருத்திசபை முறையை நாம் கொண்டுவந்து அதிகாரத்தை பரவலாக்கமுயன்ற போது காமினிதிஸநாயக்காவே அதனை எதிர்த்தார்.

தேர்தல் நடைபெற்றன. தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் திரு. காமினி நிறைய ஆட்களைக் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார்.

யாழ்ப்பாணம் சென்ற அவர் வாக்குச்சீட்டு பெட்டிகளை சேகரித்து கள்ள வாக்குகளை போட்டார். இதனை நான் கூறவில்லை. பாராளுமன்றத்தில் காமினி பிரசன்னமாய் இருந்தபோது கூட்டணி செயலதிபர் ஆற்றிய உரை என்னிடம் உள்ளது.

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்களில் சதிநாச வேலைகள் இடம்பெற்றபின்னர் ஒரு சர்வதேச நூல்நிலையமான யாழ். நூல்நிலையம் எரியூட்டப்பட்டது. வாக்குச்சீட்டுக்களால் நீதியை பெறுவதற்கே எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியை குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாத செயல்களில் இறங்கினார்கள்.

காமினி திஸநாயக்கா யாழ்ப்பாணத்திலிருந்து தேர்தல்களில் ஈடுபட்டார் என்பது இரகசியமல்ல வெளியிலிருந்து 800 பேர் தேர்தல் கடமைகளை செய்ய யாழ்ப்பாணம் அழைத்துச்செல்லப் பட்டனர். சில வாக்குச்சீட்டுப் பெட்டிகளை காணவில்லை. சில வாக்குப்பெட்டிகள் இன்னமும் காணாமலிருக்கின்றன.

இவைகள் எல்லாம் காலம் தாழ்த்திவெளிவந்துள்ளன. புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தது பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். வடக்கு கிழக்கிலுள்ள மக்களை பாதுகாக்க புலிகளுக்கு எதிராக ஆயுதப்படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீர் மறந்துவிட்டீர் போலும்.

தேசியபாதுகாப்பு அமைச்சராக ஐந்து வருடம் கடமையாற்றிய உமது சகபாடியான லலித்அத்துலத்முதலியினால் சாதிக்கமுடியாததை கடந்த இரண்டரை வருட காலத்தில் எனது நிர்வாகத்தின் கீழ் நாங்கள் புலிகளையும்ஜே. வி. பி.யையும் அழிப்பதில் வெற்றிகண்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (சி)

# வடபகுதிக்கு உணவு அனுப்ப உத்தரவு

(கொழும்பு)

வடபகுதிக்கு இருமடங்கு உணவுப் பொருள்களை அனுப்புமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இராணுவத் தாக்குதல்களினால் வடபகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மக்களுக்கு மருந்தும், உணவுப் பொருள்களும் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார்.

# உணவுப் பார்சல்

## அகதிகளுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டரிக் கழகம் நேற்று யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கும், நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கும் 2000 உணவுப்பார்சல்களை வழங்கியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள அகதிகளுக்கு உலர் உணவுகளை நிவாரணமாக நேற்று வழங்கினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் இவர்களுக்கு 9500 உணவுப் பார்சல்களை வழங்கியுள்ளனர். (158)

# ஆசிரியர் நியமனம் விஷேட ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் கணித விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்களும் பொதுவான ஆசிரியர்களையும் சேர்க்க விசேட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பரீட்சார்த்திகளுக்கு பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தல் வடக்கு-கிழக்கிலுள்ள சகல கல்விக் கந்தோர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிரியர் பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர், கடந்த வாரம் வெளியான வர்த்தமானிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சி)

# கலை நிகழ்வுப் பிரதியை சமர்ப்பிக்க கோரிக்கை

(நாவற்குழி)

நவம்பர் 21 முதல் 27 வரை கொண்டாடப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு மேடையேறவுள்ளதென்மராட்சியின் கலை நிகழ்வுகளின் பிரதிகளை இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் பிரிவுச் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (109)

# பரு. துறைமுகத்திற்கு அரச அதிபர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகளை அறியும் பொருட்டு அங்கு சென்றதாகக் கூறப்படுகின்றது. அரச அதிபருடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் சென்றனர். (வி)

# கைதடியில் சத்சங்கம்

(யாழ்ப்பாணம்)

சத்சங்கம், கூட்டுப்பிரார்த்தனை சந்தேகம் தெளிதல் ஆகிய நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஆத்மஜோதி திரு நா. முத்தையா சாயி மாதா இராசேஸ்வரி, திரு. வே. கெ. தனபாலன் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்கள்.

# அமைதிவேண்டி வழிபாடு

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் வேண்டி "அபிராமிப்பட்டர் அருளிச்செய்த அபிராமியந்தாதி" பாடல்கள் பாடப்பட்டு பின் விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுவருகிறது. [154]

# இராசி பலன்

26-10-1991

சனிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 09)

திருதியை பி. ப. 1: 18வரை ரோகினி பி. இ. 4: 34 வரை அமிர்தசித்தயோகம், ராகு காலம் காலை 9. 05 முதல் 10: 32 வரை, சுப நேரம் மாலை 3. 03முதல் 4. 33வரை.

மேடம்:- தைரிய குறைவு, மனப்போராட்டம், தொழில் கேடு

இடபம்:- தற்பெருமை, புதிய நட்பு, குடும்பசிறப்பு

மிதுனம்:- வீண் அலைச்சல், அமைதியற்றநிலை, ஆத்திரம்.

கடகம்:- சகோதர பாசம், காரிய சித்தி, பயண நன்மை.

சிங்கம்:- புதிய உறவு, தொழில் வெற்றி, விருந்து வைபவம்.

கன்னி:- இனசன தொல்லை, அடிபணிதல், தொழில் கஷ்டம்.

துலாம்:- நெஞ்சுவலி, அகாலபோசனம், யோசனை மிகுதி.

விருச்சிகம்:- சுபகாரியம், குடும்ப மகிழ்ச்சி, தானதர்மம்.

தனுசு:- பண முதலீடு, வசதி வாய்ப்பு, வீண்யோசனை.

மகரம்:- மக்கள் விரோதம், தனிமைப்படல், அவமதிப்பு.

கும்பம்: பகைவர் தொல்லை, பணவிகள் கைகூடாமை, மறதி.

மீனம்:- இனிய சந்திப்பு, தொழில்லாபம், புதிய விதானம்.

ஜோஸ்யர்

# சனசமூக நிலையங்கள் செயற்திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும்

(கொழும்புத்துறை)

"சன சமூக நிலையங்கள் தமது செயற்திட்டங்களை விரிவுபடுத்தவேண்டும். முதலுதவிச் சிகிச்சைப் பிரிவு, வீட்டுத்தோட்டம் ஆகியவற்றில் கிராம மக்களை ஈடுபடுத்தவேண்டும். இரத்ததானம் போன்ற பணிகளில் இந்நிலையங்கள் அதிக ஆர்வம் காட்டவேண்டும். கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்காக நாமனைவரும் ஒன்றுபட்டு உழைக்கமுன்வரவேண்டும்"

இவ்வாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்திரு. சு. சிவபாலசுந்தரம் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

இப்பொதுக்கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் உட்பட வேறுபலரும் உரையாற்றினர். [154]

# தமிழகத்தில் 'எய்ட்ஸ்'நோய் அதிகரிப்பு

(சென்னை)

'எயிட்ஸ்' நோய் தமிழகத்தில் வேகமாகப் பரவிவருகிறது.

ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து சுமார் 27பேர் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகியது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த 27 பேரில் 17 பேர் இரத்ததானம் செய்யவந்த போது மேற்கொண்ட பரிசோதனையின்போது அவர்களுக்கு எயிட்ஸ் நோயின் அறிகுறிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

# சவூதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சவுதிஅரேபியாவில் நிகழ்ந்த விபத்து ஒன்றில் சிக்கி அகால மரணமானார்.

பண்டத்தரிப்பு - சில்லாலை வீதியைச் சேர்ந்த தம்பையா நவரத்தினம் [52 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார், இருவருடங்களுக்கு முன்பு சவுதிஅரேபியாவுக்கு சென்ற இவர் அங்கு வாகன சாரதியாக கடமையாற்றி வந்தார். (72)

ஆங்கில

# ஆசிரியர் வெற்றிடங்களை அறிவிக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆசிரியர்கட்கு முழுநேர அல்லது பகுதிநேர வெற்றிடமுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் தத்தம் பாடசாலைகளில் வாரசந்தம் எத்தனை மணித்தியாலயம் ஆங்கில ஆசிரியர்கட்கு வேலை கொடுக்கலாம் என்ற விபரத்தை தத்தமது கோட்டப் பணிமனைப் பொறுப்பதிகாரிகளைச் சந்தித்து உரிய படிவங்களைப் பெற்று உடன் பூரணப்படுத்திக் கொடுக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) கேட்டுள்ளார்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற ஆங்கிலம் நன்கு எழுத, வாசிக்க பேச கற்பிக்கத் தெரிந்த ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் [ஆசிரியர்கள் உட்பட] ஓய்வுபெற்ற கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆகியோர் தகுதியுடையோர் ஆவர். இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் வெற்றிடமுள்ள பாடசாலைகள் அமைந்துள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களில் அல்லது கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணத்தில் விண்ணப்பங்களை பெற்று அவ்வவ் பாடசாலைகளின் அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (152)

மக்பெட்டின்

# தலைமைப்பீட முடிவிற்கு ஊழியர் ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

யாழ். நகரிலுள்ள ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தும் சம்மேளனத்தின் அலுவலகத்தில் (மக்பெட்) கடமையாற்றும் ஊழியர்களை கொழும்பில் வந்து கடமையாற்றுமாறு கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சந்தைப்படுத்தும் சம்மேளனத்தின் தலைமைப்பீடம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் இதற்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். கடந்த பல மாதங்களாக இவர்களுக்கான சம்பளமும் தலைமைப் பீடத்தினால் வழங்கப்படவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (72)

# விசாரணையின்பின் தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்படுவர்

[கொழும்பு]

களுத்துறை சிறையில் இருக்கும் தமிழ்க்கைதிகள் விசாரணை செய்து விரைவில் விடுவிக்கப்படுவர் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

நீண்டகாலமாக விசாரணை எதுவுமில்லாமல் இருந்த 248 தமிழ்க் கைதிகள் திடீரென தங்களை விசாரணைசெய்து விடுவிக்க வேண்டுமென்று உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

இவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு இணக்கம் ஏற்பட்டதையடுத்து. அரசாங்கம் இவ்வாறு அறிவித்துள்ளது. [152]

## கொடுப்பனவு வழங்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பனவு நேற்று வழங்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு சில கோட்டங்கள் விபரங்கள் தராதபடியால் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன. (152)

## விவசாயிகள், பொதுமக்கள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

இன்றைய நெருக்கடி நிலையில் பதுக்கல் நடவடிக்கைகளைத் தடுக்கும் முகமாக விவசாயிகளிடமும் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி சில வேண்டுகோள்களை விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு; ஒவ்வொரு விவசாயிகளேயும் தங்களிடமிருக்கும் விதை தானியம், எள் பொருட்கள், மேலதிகமாக இருக்கும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் போன்றவற்றின் விபரங்களை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பாவனையாளர் பாதுகாப்புக் குழுவுக்கு உடன் தெரியப்படுத்தவும். இப்படி தெரியப்படுத்துவதன் நோக்கம் உங்களுடைய பொருட்களைப் பாதுகாப்பதற்காகவே என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இன்றைய நெருக்கடியைப் பயன்படுத்தி சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கிய தன் காரணமாக வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்கள் பெரும் கஷ்டமடைந்துள்ளனர்.

கூடுதல் பணம் கொடுத்து பொருட்களைப் பெறவும் இவர்களிடம் பணம் இல்லை. இதனால் இம்மக்கள் பட்டினிச் சாவைக்கூட சந்திக்க நேரிடலாம்.

இதைத் தடுக்கும் முகமாகவே உணவு விநியோகம் சீராக நடைபெறவேண்டுமென விரும்புகின்றோம். இங்குள்ள உணவுப் பொருட்கள் பல மாதத்திற்குப் போதுமானதாக இருக்கின்றது. அப்படி இருந்தும் சில பதுக்கல்காரர்களின் நடவடிக்கைகளால்சாதாரண குடிமக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெறமுடியாது துன்பப்படுகிறார்கள்.

இது தொடர்ந்து நடந்து வரும் ஒரு நிலையாகும். உதாரணத்திற்கு தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கை தொடங்கிய அன்று 1550 ரூபாவிற்கு விற்கப்பட்ட சீனி இன்று 2150 ரூபாவிற்கு வந்துள்ளது.

தீவில் இராணுவ நடவடிக்கை தொடங்கிய அன்றிலிருந்து குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்கள் வரவில்லை. எனவே கூடுதல்விலை கொடுத்து இவர்கள் சீனியை எங்கும் கொள்முதல் செய்யவில்லை. கொள்ளை லாபநோக்குடன் பதுக்கப்பட்டதே இவ்விலை ஏற்றத்திற்குக் காரணமாகும்.

ஆனால் சிலர் இயக்கத்திற்கு பொருட்கள் கொடுத்ததால் தான் விலையேறிவிட்டதென்று வதந்தி பரப்புகின்றனர்

மக்களைப் பாதிக்கக்கூடிய இந்நடவடிக்கையிலிருந்து மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் அத்தியாவசிய விநியோகத்திட்டத்தை வலியுறுத்துகின்றோம். இதனால் ஒரு சிலருக்கு சிரமங்கள் ஏற்பட்டாலும் பெரும்பகுதி மக்கள் பயனடைகின்றார்கள்.

இதனடிப்படையில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவினால் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் பங்கீட்டு விநியோகத்தை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்த நாங்கள் உதவுகின்றோம். மக்களும் இந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி அன்புடன்வேண்டுகின்றோம்.

## கௌதாரிமுனை அகதிகள் பாஷையூரில்

[யாழ்ப்பாணம்]

கௌதாரிமுனையிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கும் மக்கள் பாசையூரில் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 'ஒயூடெக்' நிறுவனம் உதவிகள் வழங்கி வருகின்றது. (152)

## கருப்பசாமி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நடவடிக்கையாகும்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை இலங்கை – இந்திய உறவுகளைப் பாதிக்கச் செய்யுமென்றும், சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக தவறான செய்தியை வெளியிட்டமைக்காக திரு. கருப்பசாமியை வெளியேற்றியதாக இலங்கை அரசு கூறிக்கொள்ளும் அதே வேளையில் சபாநாயகர் எம். எச். முகம்மது தமது பதவியை இராஜினாமா செய்யக்கூடும் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமையை அவர் நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். (க)

## திங்கள் முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளில் ஊரடங்கு உத்தரவினாலும் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் இருந்தமையாலும் கற்றல் நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. திங்கட்கிழமை முதல் வடமராட்சிக் கோட்டம் வழமையாக இயங்கும். இடம்பெயர்ந்தோர் வதியும் பாடசாலை அதிபர்கள் தத்தம் கொத்தணி அதிபர்களுடனும், கோட்ட அலுவலகத்துடனும் இன்று 26-ந் திகதி தொடர்பு கொண்டு மாற்று நடவடிக்கைகளையாவது மேற்கொண்டு சகல மாணவர்களுக்கும் கல்வி வசதி செய்யுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்து வந்த மாணவர்களையும் இடவசதியுள்ள பாடசாலைகளில் தற்காலிக அனுமதி வழங்கிக் கல்வி மேம்பாட்டுக்கு உழைக்குமாறும் வலியுறுத்தியுள்ளார். [152]

## செய்முறைப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

1989 டிசம்பர் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணப்) பரீட்சை கர்நாடக சங்கீதம், பரதநாட்டிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 07 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடாத்தப்படும்.

பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் நவம்பர் முதலாம் திகதி முதல் கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுப் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படியும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் இத் திணைக்களத்திற்கு இது வரை வந்து சேரவில்லை என்பதையும், அவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை வேறொரு திகதியில் நடைபெறும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (152)

## வடக்கில் இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுவந்த 'ஒபரேஷன் வலம்புரி' 1ம், 2ம் கட்ட இராணுவ நடவடிக்கை முடிவடைந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தும் முயற்சியாகவே படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகவும் இந்த நோக்கம் நிறைவேறினால் இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்றும் கேர்ணல் முனசிங்க கூறினார். (இ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். பரியோவான் கல்லூரியின் வியோகழக கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது வருகைதருமாறு கேட்கப்படுகின்றனர்.

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக நாளை 27ம் திகதி நடைபெறவிருந்த யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

## பொது அறிவித்தல் : அரிசிஆலை உரிமையாளர்கள்; மொத்த விற்பனையாளர்கள்

[யாழ்ப்பாணம்]

தற்போதுள்ள சூழலில் பொதுமக்களுக்கான உணவு விநியோகம் சீராக நடைபெறுவதற்கேற்ற ஒழுங்குகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மேற்கொண்டுள்ளது. அரிசியாலை உரிமையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி தேயிலை பால்மா, தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய் பருப்பு ஆகியபொருள்களை வைத்திருக்கும் வர்த்தகர்கள் ஆகியோர் தங்களிடம் இருக்கும் இப்பொருள்களின் விபரத்தைத் தங்கள் பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவிடம் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர். விபரங்களைக் கொடுக்கும் போது இரண்டு பிரதிகள் கொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

மேற்கூறிய விபரங்களைக் கொடுக்கத்தவறின் அத்தியாவசியப் பொருட்களாக காணப்படும் இந்தப் பொருட்களை பதுக்கல் பொருட்களாக நாம் கருதி பதுக்கலுக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்வோம் என்பதை அறியத்தருகிறோம். உங்களிடம் இருக்கும் கையிருப்புக்களை முன்கூட்டியே தெரியப்படுத்தி உங்களுடைய பொருட்களை பாதுகாருங்கள்.

நீங்கள் பொருட்களை ஓரிடத்தில்இருந்து வேறு இடத்திற்கு மாற்றுவதாக இருந்தாலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் பாவனையாளர் பாதுகாப்புக் குழுவிடம் அனுமதி பெற்றேகொண்டுசெல்லவேண்டும். அப்படித் தெரியப்படுத்தாது கொண்டுசென்றால் அப் பொருட்கள் பதுக்கலுக்கு கொண்டு செல்லப்படும் பொருட்களாகக் கருதி பறிமுதல் செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

பொதுமக்களின் நலன்கருதியே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் பொறுத்துக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

## வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசியப் பொருட்களை வாகனங்களில் இடத்துக்கிடம் மாற்றும்போது வீதிகளில் வைத்து தமிழீழ காவல் துறையினர் சோதனை நடாத்தும்வேளையில் சிரமத்தைபாராமல் வாகன உரிமையாளர்கள் அவர்களிடம் அத்தாட்சிப் பத்திரங்களை காண்பிக்கும்படி தமிழீழக் காவல் துறையின் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வி)

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

நித்தியகுளப்பகுதியில் 14-09-91 அன்று நடைபெற்ற மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சித்தார்த்தன் [ஸ்ரீஸ்கந்தராஜா சிறிதரன், திருவையாறு, கிளிநொச்சி] 25-10-91 அன்று வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்:

## படையினர் காயம்

[கொழும்பு]

சங்குப்பிட்டிப்பகுதியில் நிலக்கண்ணி வெடித்ததில் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. [ச]

## ஷார்ஜாவில் பாகிஸ்தான் வெற்றி

[ஷார்ஜா]

ஷார்ஜாவில் நேற்று பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்று, ஷார்ஜா வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 6 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 262 ஓட்டங்களைப் பெற்றது இந்திய சகல விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

## நரசிம்மராவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிற்கு விஜயம் செய்தார்.

தனிவிமானத்தில் சென்னை விமான நிலையம் வந்த பிரதமரை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உட்பட பல பிரமுகர்கள் வரவேற்றனர். (க)

## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு யாழ். அரச அதிபருக்கு அறிவித்திருக்கின்றது. இந்த லொறிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அனுசரணையுடன் வரவிருக்கின்றன. [152]

## ஓய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் திங்கட்கிழமை வரவிருக்கும் குமண கப்பலில் ஒய்வூதிய வவுச்சர்கள் வராவிட்டால், அக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் யாழ். செயலகத்தால் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

இவ்வாறு யாழ்: அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கூறினார். இதன் பிரகாரம் ஓய்வூதிய வவுச்சர்கள் இங்கு அச்சடிக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விரைவாக ஓய்வூதியம் பெற ஒரு மாற்று ஒழுங்கைச் செய்ய யாழ். செயலகம் முன்வந்துள்ளது. (152)

## ஒத்துழைப்பு குறித்து ஆராய்வு

[கொழும்பு]

அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டில் பொருளாதார ரீதியான ஒத்துழைப்புகள் தொடர்பாக ஆராயப்படுமென்று இலங்கை வெளியுறவு துணைச்செயலர் பெர்னாட் திலகரத்ன தெரிவித்தார். [153]

## பி. பி. ஸி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரைமணி நேரம்வரையிலான இந்த ஒளிபரப்பில் புலிகள் தலைவர்களின் பேட்டிகளும், வடபகுதியின் தற்போதைய நிலைபற்றியும் விரிவாக காண்பிக்கப்பட்டது. [இ]

## எதிரணிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கொள்ளாது.

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் நாடாளுமன்ற செயற்பாடுகள் எந்தவித இடையூறும் இன்றி வழமைபோல் தொடர்ந்து நடைபெறும்.

இதன் அடிப்படையில் கடந்த புதன்கிழமை மேலதிக குறை நிரப்பு நிதி சட்டமூலங்களை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது அனுமதித்தது சரியானது என்றார். [153]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்ரோபர் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/18936/81